Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, டிசம்பர் 13, 2021

**நெஸ்லே லங்கா நிறுவனம் தேங்காய் கொப்பரை உற்பத்தித் துறையில் 'சிறந்த ஏற்றுமதியாளர்' என்ற ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளை வென்றுள்ளது**

அண்மையில் இடம்பெற்ற 24 ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் நிகழ்வில், 2019/2020 மற்றும் 2020/2021 நிதியாண்டுகளுக்காக தேங்காய் கொப்பரை உற்பத்தித்துறையில் சிறந்த ஏற்றுமதியாளருக்கான விருதை நெஸ்லே லங்கா நிறுவனம் வென்றுள்ளது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மதிப்புமிக்க விருதுகள் நாட்டின் ஏற்றுமதித் துறையில் நிறுவனங்கள் ஆற்றுகின்ற சிறந்த பங்களிப்பிற்கான இனங்காணல் அங்கீகாரமாக வழங்கப்படுகின்றன.

"தேசிய ஏற்றுமதியை வலுப்படுத்துவதில் எங்களின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு அங்கீகாரம் கிடைத்திருப்பது உண்மையிலேயே ஒரு கௌரவமாகும். தொடர்ந்து இரண்டு நிதியாண்டுகளாக , குறிப்பாக மிகவும் சவால்மிக்க ஆண்டுகளில் 'தேங்காய் கொப்பரை உற்பத்தித்துறையில் சிறந்த ஏற்றுமதியாளர்' என்ற விருதைப் பெற்றுள்ளமை, எங்கள் அணியின் ஓயாத அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சிக்கு சான்றாகும். எமது செயற்பாடுகள் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியமைக்காகவும், உள்நாட்டில் தேங்காய் உற்பத்திக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கும், எமது பயிர்ச் செய்கையாளர் சமூகத்திற்கு நிலைபேண்தகு வாழ்வாதாரத்தை தோற்றுவிப்பதற்கு உதவுவதையிட்டும் நான் பெருமையடைகிறேன்," என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. ஜேசன் அவன்சென்யா அவர்கள் குறிப்பிட்டார்.

நெஸ்லே நிறுவனம் 1986 ஆம் ஆண்டில் மெகி தேங்காய் பால் மா தயாரிப்பை அறிமுகப்படுத்தியிருந்தது. அதன் பின்னர் 35 வருடங்களாக, நிறுவனம் 6,000 இற்கும் மேற்பட்ட இலங்கை பயிர்ச் செய்கையாளர்களின் வாழ்வாதாரத்திற்கு ஆதரவளித்து, அவர்களின் நல்வாழ்வை தொடர்ந்து மேம்படுத்தி வந்துள்ளது. நிறுவனம் கடந்த ஆண்டில் 90 மில்லியனுக்கும் அதிகமான புத்தம்புதிய தேங்காய்களை கொள்முதல் செய்து, கிராமப்புற சமூகங்களுக்கு ரூபா 4.5 பில்லியன் தொகையை அதற்காக செலுத்தியுள்ளது. மேலும், உலகில் தேங்காய் பால் மா ஏற்றுமதியில் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்று என்ற வகையில், 2020 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ரூபா 3.8 பில்லியன் தொகையை ஏற்றுமதி வருமானத்தின் மூலமாக பங்களித்துள்ளது. இந்நிறுவனம் நெஸ்லே தென்னை வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக 4,000 கிராமப்புறக் குடும்பங்களுக்கு ஆதரவளித்து, அவர்களுக்கு இலவச கலப்பின தென்னம் கன்றுகள், தொழில்நுட்ப உதவி மற்றும் தீவிர பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கியுள்ளது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் வழங்கல் சங்கிலிக்கான துணைத் தலைமை அதிகாரியான திரு. பஞ்சாட்சரம் சத்தியேந்திரா அவர்கள் கூறுகையில், "இந்த இனங்காணல் அங்கீகாரத்தால் நாங்கள் பணிவும் பெருமகிழ்ச்சியும் அடைகிறோம். நாங்கள் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர், நெஸ்லே நிறுவனத்தின் தர உத்தரவாதத்துடன், எங்கள் நுகர்வோருக்கு சௌகரியத்தை வழங்கும் பொருட்டு, மெகி தேங்காய் பால் மாவைப் புத்தாக்கமான வழியில் அறிமுகப்படுத்தியிருந்தோம். கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கையர்களுக்கு மட்டுமன்றி, உலகெங்கிலும் உள்ள 50 இற்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள நுகர்வோருக்கு சேவையாற்றும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளதையிட்டு நான் பெருமையடைகிறேன்!," என்று குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் நிகழ்வானது, உள்நாட்டு ஏற்றுமதித் துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக இலங்கையில் ஏற்பாடு செய்யப்படும் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வுகளில் ஒன்றாகும். 2018/2019 ஆம் ஆண்டில் 'தேங்காய் கொப்பரை உற்பத்தித் துறையில் சிறந்த ஏற்றுமதியாளர்', 2018 ஆம் ஆண்டில் 'தேங்காய் கொப்பரை உற்பத்திகளுக்கு அதிகூடுதல் அந்நியச் செலாவணி ஈட்டுநர்', 2017 ஆம் ஆண்டில் 'தேங்காய் கொப்பரை உற்பத்தித் துறையில் அதிக மதிப்பு கூட்டப்பட்ட ஏற்றுமதியாளர்' 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் 'ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மிகச் சிறந்த பல்தேசிய நிறுவனம்', 2013 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் 'தேங்காய் மற்றும் தேங்காயை மூலமாகக் கொண்ட உற்பத்தித் துறையில் மிகச் சிறந்த ஏற்றுமதியாளர்' மற்றும் 2011 ஆம் ஆண்டில் 'உணவு மற்றும்

ஏனைய பான வகை உற்பத்தித் துறையில் மிகச் சிறந்த ஏற்றுமதியாளர்' ஆகியவை நெஸ்லே நிறுவனம் கடந்த காலங்களில் வென்றுள்ள விருதுகளில் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நெஸ்லே நிறுவனம் 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு உள்ளங்கமாக இருந்து வருகிறது. 'அனைவருக்கும், இன்றும், எதிர்வரும் தலைமுறைகளுக்கும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உணவின் ஆற்றலை வெளிக்கொணருவது' என்ற அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, நெஸ்லே தனது பல்வேறு உணவு மற்றும் பான உற்பத்தி வரிசை மூலம் இளமை முதல் முதுமை வரை தலைமுறை தலைமுறையாக நுகர்வோருக்கு தயாரிப்புக்களை வழங்கி வருகிறது.